# JSR IAS ACADEMY

# பொது அறிவியல்

# வேதியியல்

# உலோகவியல்

**உலோகவியல்**

- மனித உடலில் **சோடியம், பொட்டாசியம், கால்சியம், இரும்பு** முதலான உலோகங்கள் இன்றியமையா இடம் பெற்றுள்ளன.
- உலோகங்களை அவற்றின் தாதுக்களிலிருந்து பிரித்தெடுத்து, உலோகக் கலவைகளாக மாற்றி, வெவ்வேறு பயன் பாட்டுக்கு உட்படுத்தும் அறிவியலே **உலோகவியல்** எனப்படும்.

**உலோகவியலின் செயல்பாடுகள் மூன்று படிகளைக் கொண்டது.**

1. **தாதுக்களை அடர்ப்பித்தல்**
   தாதுக்களில் உள்ள மாசுக்கள் நீக்கப்படுகின்றன.
2. **உலோகத்தை உருவாக்கல்**
   தாதுவில் இருந்து உலோகம் பிரித்தெடுக்கப்படுகிறது.
3. **உலோகத்தை தூய்மையாக்கல்**
   உலோகமானது தூய்மை செய்யப்படுகிறது.

**உலோகவியலில் உள்ள கலைச் சொற்கள்**

**கனிமங்கள்:**

ஒரு கனிமம் என்பது **தனி சேர்மமாகவோ அல்லது வெவ்வேறு சேர்மங்களைச்** சேர்த்து அடக்கிய கூட்டுக் கலவையாகவோ புவியில் காணப்படும்.

**தாது:**

எக்கனிமத்திலிருந்து, உலோகமானது எளிதில், சிக்கனமாக, பெரிய அளவில் பிரித்தெடுக்க முடிகிறதோ அதுவே தாது எனப்படும்.

உதாரணமாக களிமண்ணும், ($Al_2O_3.2SiO_2.2H_2O$) பாக்சைட்டும் ($Al_2O_3.2H_2O$) அலுமினியத்தின் கனிமங்களாகும். ஆனால், பாக்சைட்டிலிருந்து அலுமினியம் இலாபகரமாக பிரித்தெடுக்கமுடிவதால், பாக்சைட்டானது அலுமினியத்தின் தாது என்றும், களிமண் அதன் கனிமம் என்றும் அழைக்கப்படும்.

**தாதுக்கூளம் அல்லது காங்கு:**

உலோகத் தாதுப்பொருட்களோடு கலந்துள்ள **மண் மற்றும் பாறைத் தூள்** மாசுக்கள் காங்கு அல்லது தாதுக்கூளம் எனப்படும்.

**இளக்கி:**

தாதுவுடன் உள்ள மாசுக்களை (காங்கு) உருகிடும் சேர்மமாக மாற்றி, அதை நீக்கிட தாதுவுடன் சேர்க்கும் பொருளே இளக்கி எனப்படும். எ.கா $CaO$ (காரத்தன்மையது), $SiO_2$ (அமிலத்தன்மையது)

**கசடு:**

உலோகத்தைப் பிரித்தலில், இளக்கி தாதுக் கூளத்துடன் வினைபுரிந்து உருவாக்கும் விளைபொருளே கசடு எனப்படும்.

தாதுக்கூளம் + இளக்கி = கசடு

**உருக்கிப்பிரித்தல்:**

வறுத்த உலோக ஆக்சைடை, உலோகமாக உருகிய நிலையில், மாற்றும் ஒரு ஒடுக்கவினையே உருக்கிப்பிரித்தல் ஆகும். இம்முறையில் காங்கு எனப்படும் மாசுக்கள், சேர்க்கப்பட்ட இளக்கியால் கசடாக நீக்கப்படுகின்றன.

**தாதுக்களை பிரித்தெடுக்கும் முறைகள் அல்லது அடர்ப்பிக்கும் முறைகள்**

நன்கு தூளாக்கப்பட்ட தாதுக்களை அடர்ப்பிக்கும் முறைகள் கீழ்க்கண்டவாறு அமைகின்றன.

1. **புவியீர்ப்பு முறையில் பிரித்தல்**

**தத்துவம்** : தாதுக்களுக்கும், தாதுக் கூளங்களுக்கும், இடையில் உள்ள அடர்த்தி வேறுபாடு இம்முறையின் அடிப்படையாகும். ஆக்சைடு தாதுக்கள் இம்முறையினால் தூய்மையாக்கப்படுகின்றன. எ.கா **ஹேமடைட் $Fe_2O_3$ (இரும்பின் தாது)**

**முறை:** நன்கு தூளாக்கப்பட்ட தாது, அதிர்வடையும் சாய் தளத்தின்மேல் கொட்டப்படும். பிறகு நீர் அதன் மேல் பீய்ச்சி அடிக்கப்படும். இனால், அடர்த்தி மிகு தாது தூள்கள் கீழே தங்கி விட லேசான தாதுக்கூளங்கள், தண்ணீரால் கழுவி நீக்கப்படுகின்றன.

2. **காந்த முறை பிரிப்பு**

**தத்துவம்** : தாதுக்களின் காந்தத்தன்மை, பிரித்தலின் அடிப்படையாக அமைகிறது. தாதுவோ அல்லது தாதுக்கூளமோ காந்தத் தன்மை பெற்றிருப்பின், இம்முறை செயல்படுத்தப்படும். எ.கா **டின்ஸ்டோன் $SnO_2$ வெள்ளீயத்தின் தாது.**

**முறை:** உருளைகளில் ஒன்று காந்தத் தன்மையுடன் இருப்பதால், காந்தத் துகள்கள், காந்த தன்மையுள்ள உருளையால் ஈர்க்கப்பட்டு காந்த தன்மையற்ற துகள்கள் தொலைவில் செறிந்து பிரிக்கப்படும்.




3. **நுரைமிதப்புமுறை**

**தத்துவம்:** பைன் ஆயிலின் மூலம் தாதுக்களையும், நீரின் மூலம் தாதுக்கூளங்களையும் எந்த அளவிற்கு எளிதில் ஈரப்பதம் ஏற்ற முடியுமோ, அதுவே, இம்முறையின் தத்துவமாகும். லேசான தாதுக்களான, **சல்பைடு தாதுக்கள்**, இம்முறையில் அடர்ப்பிக்கப்படுகின்றன. எ.கா **ஜிங்க் ப்ளன்ட் ZnS**

**முறை:** தாதுவானது எண்ணெயின் மூலம் ஈரப்படுத்தப்பட்டு நுரைவடிவில், தாதுக்கூளத்திலிருந்து பிரிக்கப்படுகின்றது. தாதுவானது லேசாக உள்ளதால் அது நுரைவடிவில் வெளிப்பரப்பிற்கு வந்துவிடும், மாசுக்கள் அடியில் தங்கிவிடும். எ.கா **ஜிங்க் ப்ளன்ட் (ZnS).**

**4. வேதிமுறை:**

மிக தூய நிலையில் உள்ள தாதுக்களை அடர்பித்தலுக்கு இம்முறை பயன்படுத்தப்படுகிறது. தாதுவானது தகுந்த வேதிப்பொருளுடன் வினைபுரிய செய்து கரையச் செய்வதன் மூலம், கரையாத மாசுக்கள் வடிக்கட்டலின் மூலம் பிரித்தெடுக்கப்படுகின்றன.

எ.கா **பாக்சைட் $Al_2O_3$ .$2H_2O$ (அலுமினியத்தின் முக்கிய தாது)**

| ஆக்சைடு தாது | கார்பனேட் தாது | ஹேலைடு தாது | சல்பைடு தாது |
|---|---|---|---|
| பாக்சைட் ($Al_2O_3 \cdot 2H_2O$) | மார்பிள் ($CaCO_3$) | கிரையோலைட்($Na_3AlF_6$) | கலீனா (PbS) |
| குப்ரைட் ($Cu_2O$) | மாக்னசைட் (($MgCO_3$) | ஃப்ளூர்ஸ்பார் ($CaF_2$) | இரும்பு பைரைட் ($FeS_2$) |
| ஹேமடைட் ( $Fe_2O_3$) | சிட்ரைட் ($FeCO_3$) | பாறைஉப்பு (NaCl) | ஜிங்க் ப்ளண்ட் (ZnS) |

**தமிழ்நாட்டில் கிடைக்கும் தாதுக்கள்**

- **சுண்ணாம்புக்கல்** : கோவை, கடலூர், திண்டுக்கல்
- **ஜிப்சம்** : திருச்சி, கோவை மாவட்டங்கள்.
- **டைட்டேனிய கனிமங்கள் :** கன்னியாகுமரி, நெல்லை மற்றும் தூத்துக்குடி
- **குரோமைட்** : கோவை, சேலம் மாவட்டங்கள்
- **மேக்னடைட்:** தர்மபுரி, ஈரோடு, சேலம், திருவண்ணாமலை
- **டங்க்ஸ்டன்** : மதுரை, திண்டுக்கல்

**உலோகத்தின் பண்புகள்**

**இயற்பண்புகள்**

**1. இயல்பு நிலை:** அறை வெப்பநிலையில் திட நிலையில் உள்ளவை. (மெர்குரி மற்றும் காலியம் தவிர)

**2. பளபளப்புத் தன்மை:** அதிக பளபளப்பானவை

**3.கடின தன்மை:** அனேக உலோகங்கள், கடின தன்மையையும் வலிமையையும் பெற்றவை . **சோடியம், பொட்டாசியம் தவிர**.

**4. உருகுநிலை மற்றும் கொதிநிலை:** அதி உருகுநிலை மற்றும் கொதிநிலையைப் பெற்றிருக்கும். அதிக வெப்பநிலையில், அவை ஆவியாகும். (**காலியம், மெர்குரி, சோடியம், பொட்டாசியம் தவிர**)

**5. அடர்த்தி:** உலோகங்கள் அதிக அடர்த்தி பெற்றவை. (**சோடியம் மற்றும் பொட்டாசியம் தவிர** இவை தண்ணீர் விட அடர்த்தி குறைந்தவை)

**6. கம்பியாக நீளும் தன்மை:** உலோகங்கள் கம்பியாக நீளும் தன்மையன.

**7. தகடாகும் துன்மை:** உலோகங்கள் தகடாகும் தன்மை பெற்றவை.

**8. வெப்பம் மற்றும் மின்கடத்தும் தன்மை:** உலோகங்கள் வெப்பத்தையும், மின்சாரத்தையும் எளிதில் கடத்தும் தன்மையன. எ.கா வெள்ளி, தாமிரம் (**டங்கஸ்டன் தவிர**)

**9. கரையும் தன்மை:** திரவ கரைப்பான்களில் கரைவதில்லை.

**வேதியியல் பண்புகள்**

1. **இணைதிற எலக்ட்ரான்கள்:** உலோக அணுக்கள் **பொதுவாக 1,2 அல்லது 3 எலக்ட்ரான்களை** வெளிகூட்டில் பெற்றுள்ளன.
2. **அயனி உருவாதல் பண்பு:** உலோகங்கள் **எலக்ட்ரான்களை இழந்து நேர்மின் அயனிகளாக மாறும்** தன்மை உடையவை. அதனால் அவை நேர்மின் சுமை பெறும்.
3. **அயனி மின்சுமை இழத்தல்:** உலோகங்களின் சேர்மங்கள் மின்னறற்பகுத்தல் வினையின் போது, உலோக அயனிகள் எதிர்மின்வாய் வந்தடையும்.
4. **அணுக்கட்டு எண்:** உலோக மூலக்கூறுகள், **ஆவிநிலையில், ஒற்றை அணுக்கட்டு எண்ணைப்** பெற்றுள்ளன
5. **ஆக்சைடுகளின் தன்மை:** உலோக ஆக்சைடுகள் பொதுவாக **காரத்தன்மை** உடையன.

உலோக ஆக்சைடிலிருந்து உலோகத்தைப் பிரித்தல் 3 வகைப்படும்.

| அதி வினைபடும் உலோகங்கள் | சாதாரணமாக வினைபடும் உலோகங்கள் | குறைவாக வினைபடும் உலோகங்கள் |
|---|---|---|
| Na, K, Ca, Mg, Al | Zn, Fe, pb, Cu | Ag, Hg |
| உலோக ஆக்சைடு உலோகமாக மின்னாற் பகுப்பின் மூலம் ஒடுக்கம் அடைகிறது | உலோக ஆக்சைடு உலோகமாக கார்பன் (CoKe) உதவியுடன் வேதி ஒடுக்கம் அடைகிறது. | செஞ்சூடேற்றி சிதைவுறுதலால் உலோக ஆக்சைடு உலோகமாக ஒடுக்கம் அடைகிறது. |